# நீதியை நிலைநாட்டிய சிலம்பு

இயல் - 8

தமிழ் மொழியில் ஐந்து பெருங்காப்பியங்களும் ஐந்து சிறு காப்பியங்களும் உள்ளன.

ஐம்பெருங் காப்பியங்களுள் முதல் பெருங்காப்பியமாகப் போற்றப்படுவது சிலப்பதிகாரம் ஆகும்.

அதில் ஒரு சிறுபகுதி வழக்குரை காதை என்பது. இந்தப் பகுதி மூலம் காப்பியத் தலைவி கண்ணகி, தன் கணவன் கோவலன் கள்வன் அல்லன் என நிறுவியதையும் அதன்வழி முப்பெரும் உண்மைகளுள் இரண்டு உணர்த்தப்படுவதையும் இங்கு காணலாம்.

# காப்பிய அமைப்பு

- சிலப்பதிகாரக் காப்பிய நிகழ்ச்சிகள் முறையே சோழ, பாண்டிய, சேர நாடு என்னும் மூன்று நாடுகளில் மூவேந்தரின் தலைநகரங்களிலும் நடந்த நிகழ்ச்சிகளாம்.
- எனவே இக்காப்பியம் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்று மூன்று காண்டங்களாக வகுத்துக் கூறப்பட்டுள்ளது.
- இந்த மூன்று காண்டங்களில் முப்பது காதைகள் அமைந்துள்ளன. (காண்டம் - பெரும் பிரிவு; காதை = சிறு பிரிவு)
- * பெயர்க்காரணம் : இந்தக் காப்பியத்தின் கதை சிலம்பினைக் காரணமாகக் கொண்டு அமைந்ததால் சிலப்பதிகாரம் எனப் பெயரிடப்பட்டது.

# வழக்குரை காதை

- கோவலன் தன் மனைவி கண்ணகியுடன் பொருள் தேட மதுரை செல்கிறான். மதுரையில் மாதரி என்ற ஆயர்குலப் பெண்ணிடம் கண்ணகியை அடைக்கலமாக இருக்கச் செய்து, கண்ணகி தந்த காற்சிலம்பை விற்று வரக் கருதி மதுரை நகர்க் கடைத்தெருவிற்குச் செல்கிறான். அங்கு அரண்மனைச் சிலம்பைத் திருடிய பொற்கொல்லன் ஒருவனது சூழ்ச்சிக்கு ஆளாகிறான். அதன் விளைவு கோவலன் திருடன் எனக் கருதப்பட்டு அரசன் ஆணையால் கொலை செய்யப்படுகிறான். கோவலன் கொலையுண்ட செய்தி கேட்ட கண்ணகி சினந்து எழுந்து பாண்டியன் அரசவைக்குச் சென்று வழக்குரைத்துக் கோவலன் கள்வன் அல்லன் என்பதைத் தெளிவுபடுத்துகின்றாள். உண்மை உணர்ந்த பாண்டியன் அக்கணமே தன்னுயிர் நீத்து நீதியை நிலை நிறுத்துகிறான்.

# காப்பியத் தலைவி

காப்பிய இலக்கணப்படி பெருங்காப்பியம் தன்னேரில்லாத தலைவனைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் சிலம்பில் கண்ணகி தன் நிகரில்லாத தலைவியாகப் போற்றப்படுகின்றாள்.

# முத்தமிழ்க் காப்பியம்

- இளங்கோ அடிகள் இக்காப்பியத்தில் இயல், இசை, நாடகம் என்ற மூன்று தமிழையும் பயன்படுத்தியுள்ளார். அதனால் சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம் எனப் போற்றப்படுகிறது.

- * மூன்று நீதிகள் அல்லது உண்மைகள்
- சிலப்பதிகாரம் இவ்வுலக மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் மூன்று உண்மைகளைக் கருப்பொருளாகக் கொண்டு அமைந்துள்ளது. அவையாவன:

- அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவது ;
- உரை சால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவது ;
- ஊழ் வினை உருத்து வந்து ஊட்டும்.

# காப்பியப் பெருமை

- சிலப்பதிகாரக் காலத்தில் வழக்கிலிருந்த தமிழர்தம் பண்பாடு, சமய நெறிகள், பழக்க வழக்கங்கள், கலைகள் ஆகியவற்றை அறிந்து கொள்ள இக்காப்பியம் பெரிதும் துணைநிற்கும்.
- சிலப்பதிகாரக் காப்பியத்தின் பெருமையைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம்" எனப் பாராட்டியுள்ளார்.